# ஏப்ரல் - 03 - செவ்வாய்

**புனித றிச்சட்**

**ஆண்டவரின் வாக்கு நேர்மையானது: திபா. 33:4**

## முதல் வாசகம் :திருத்தூதர் பணிகள்2 : 36 – 41

பெந்தகோஸ்தே நாளில் பேதுரு யூதமக்களைப் பார்த்துக் கூறியது: நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவைக் கடவுள் ஆண்டவரும் மெசியாவுமாக்கினார் என்பதை இஸ்ரயேல் மக்களாகிய நீங்கள் அனைவரும் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்." அவர்கள் இதைக்கேட்டு உள்ளம் குத்தப்பட்டவர்களாய் பேதுருவையும் மற்ற திருத்தூதர்களையும் பார்த்து, "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள். அதற்குப் பேதுரு, அவர்களிடம், "நீங்கள் மனம் மாறுங்கள். உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெறுங்கள். அப்பொழுது தூய ஆவியைக் கொடையாகப் பெறுவீர்கள். ஏனென்றால் இந்த வாக்குறுதியானது உங்களுக்கும் உங்களது பிள்ளைகளுக்கும் தொலையிலுள்ள யாவருக்கும் ஆண்டவராகிய கடவுள் தம்மிடம் அழைக்கும் அனைவருக்கும் உரியது" என்றார். மேலும் அவர் வேறுபல சான்றுகளை எடுத்துக்கூறி, "நெறிக்கெட்ட இந்தத் தலைமுறையிலிருந்து, உங்களைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள்" என்று அறிவுறுத்தினார். அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டவர்கள் திருமுழுக்குப் பெற்றார்கள். அன்று ஏறக்குறைய மூவாயிரம் பேர் அவர்களோடு சேர்க்கப்பட்டனர்.

**பதில்பாடல் :** ஆண்டவரது பேரன்பால் பூவுலகு நிறைந்துள்ளது.

## நற்செய்தி : யோவான் 20 : 11 – 18

அக்காலத்தில் மரியா கல்லறைக்கு வெளியே நின்று அழுதுகொண்டிருந்தார் அழுது கொண்டே கல்லறைக்குள் குனிந்து பார்த்தார்.அங்கே வெண்ணாடை அணிந்த இருவானதூதரை அவர் கண்டார். இயேசுவின் உடலை வைத்திருந்த இடத்தில் ஒருவர் தலைமாட்டிலும் மற்றவர் கால்மாட்டிலுமாக அவர்கள் அமர்ந்திருந்தார்கள்.அவர்கள் மரியாவிடம், "அம்மா, ஏன் அழுகிறீர்?" என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், "என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டனர் அவரை எங்கே வைத்தனரோ எனக்குத் தெரியவில்லை" என்றார்.இப்படிச் சொல்லிவிட்டு அவர் திரும்பிப் பார்த்தபோது இயேசு நிற்பதைக் கண்டார். ஆனால் அங்க நிற்பவர் இயேசு என்று அவர் அறிந்து கொள்ளவில்லை.இயேசு அவரிடம், "ஏனம்மா அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?" என்று கேட்டார். மரியா அவரைத் தோட்டக்காரர் என்று நினைத்து அவரிடம், "ஐயா, நீர் அவரைத் தூக்கிக் கொண்டு போயிருந்தால் எங்கே வைத்தீர் எனச் சொல்லும். நான் அவரை எடுத்துச் செல்வேன்" என்றார்.இயேசு அவரிடம், "மரியா" என்றார். மரியா திரும்பிப் பார்த்து, "ரபூனி" என்றார். இந்த எபிரேயச் சொல்லுக்கு "போதகரே" என்பது பொருள். இயேசு அவரிடம், "என்னை இப்படிப் பற்றிக் கொள்ளாதே. நான் என் தந்தையிடம் இன்னும் செல்லவில்லை. நீ என் சகோதரர்களிடம் சென்று அவர்களிடம், "என் தந்தையும் உங்கள் தந்தையும் என் கடவுளுமானவரிடம் செல்லவிருக்கிறேன்" எனச் சொல்" என்றார்.மகதலா மரியா சீடரிடம் சென்று, "நான் ஆண்டவரைக் கண்டேன்" என்றார் தம்மிடம் இயேசு கூறியவற்றையும் அவர்களிடம் சொன்னார்.

**தியானம்:** நாங்கள் நம்பிக்கை கொண்டு வாழ்ந்தோமேயானால் அன்று அப்போஸ்தலர்களுக்கு தனது வல்லமையின் நிமித்தம் அற்புதங்களைச் செய்வதற்காக அவர்களைத் தெரிந்தெடுத்தாரோ, அதேபோன்று எங்களையும் தெரிந்தெடுத்து தனது வல்லமையால் எங்களையும் வழிநடத்துவார் என்று இன்றைய வாசகங்கள் தெளிவுபடுத்துகின்றன. அன்று யோவானும், பேதுருவும் முடக்குவாதமுற்ற ஒரு நோயாளியைப் பார்த்து பிச்சை கேட்டபோது பேதுரு "பொன்னோ வெள்ளியோ என்னிடமில்லை என்னிடமுள்ளதை உனக்குத் தருகின்றேன்" என்று இவ்வாறு கூறுகின்றார். (தி.ப. 3:6) ஏனெனில் இயேசுவை நம்பினார்கள், அவர் வார்த்தையின்படி நடந்தார்கள். இதன் நிமித்தம் நோய்களைக் குணப்படுத்தவும், பேய்களை ஓட்டவும் பல அதிகாரங்களைக் கொடுத்து அனுப்பி விடுகின்றார். எனவே தான் இயேசுவின் பெயரால் அவர்கள் யாவற்றையும் செய்தார்கள். இறைமகிமையைப் பெற்றார்கள். இன்று எங்கள் மத்தியில் சிலர் இறை நம்பிக்கையின் நிமித்தம் செய்கின்றோம் என்று சொல்கின்றோம், ஆனால் உலக நாட்டங்கள், மாயக்கவர்ச்சிகளால் கவரப்பட்டு பாவத்திற்கு அடிமைப்பட்டு அவ்வாறான அருளை இழந்துவிடுகின்றோம். காரணம் இறைவார்த்தையில் நிலைத்து வாழாததே. எனவே நாங்கள் தினமும் இறைவார்த்தை வாசித்து சிந்தித்து செயற்படுவோம். மற்றவர்களுக்கு நாங்கள் பெற்றுக்கொண்ட மறையறிவை பகிர்ந்து கொள்வோம். இவ்வாறான பலவிதமான நற்காரியங்கள் செய்யும்பொழுது எமது விசுவாச வாழ்வானது உறுதிபெறும், அவரது அன்பு பகிரப்படும், அவரது திட்டமும் முழுமைபெறும். இவ்வாறான நற்காரியங்கள் செய்து இறைவனில் நிலைத்து வாழ்வோமென இன்றைய நாளில் முடிவெடுப்போம்.